**தமன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,104,958 செலவில் நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவக் கட்டிடம் வருமானச் செலவினக் கணக்கில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் ஹிங்குரான வாராந்த சந்தையைச் சுற்றி வேலி நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,645,275 தொகை வருமானச் செலவினக் கணக்கில் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான பெறுமதி இனங்காண முடியுமான ரூபா 8,250,000 பெறுமதியான டபள் கப் வண்டியும் முச்சக்கர வண்டியும் மற்றும் பெறுமதி இனங்காண முடியாத உழவு இயந்திரமொன்று என்பன மோட்டார் வாகனங்களும் வண்டியின் கீழ் காண்பிக்கப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அந்த சொத்துக்களின் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் இரண்டு படகுகள் வாடகைக்கு வழங்கியமையால் 2016 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய வருமானமான ரூபா 42,000 தொகை ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 33,712 தொகையான பெயர்ப் பலகை வருமானம் ஆண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| கட்டிட பராமரிப்பு | 62,468 | பராமரிப்புச் செலவின பதிவேடு |
| நிலுவை ஏக்கர் வரி | 230,850 | ஏக்கர் வரி பதிவேடு |
| மோட்டார் வாகனமும் வண்டியும் | 23,655 | நிலையான சொத்துப் பதிவேடு |

### 1.3.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | பிரதேச சபை விதி 180 மற்றும் 181 | பிரதேச சபையின் வருமானங்களைச் சேகரித்தல், களஞ்சியக் கட்டுப்பாடு, காசோலை விநியோகித்தல் என்பவற்றுக்குரிய உத்தியோகத்தர்களினால் பிணைப்பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | (i) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அலுவலக உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கைகளைப் பதிவதற்காக கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 30/2016 (03.01) | சபைக்குச் சொந்தமான 22 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமாக 05 கணனிகள் காணப்பட்ட போதிலும், கணனி துணைப்பாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வேலை நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 2,499,342 தொகையான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,500,902 தொகையான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானமாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 1,001,560 வீழ்ச்சியினைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வாடகை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைகளுக்கான கட்டணம் மற்றும் தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும், ஏனைய வருமானம் போன்ற விடயங்களில் 03 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், வீத வரியும் வரியும் என்ற வருமான விடயத்தில் 04 சதவீத வீழ்ச்சியினையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சம்பளம், படிகள், வழங்கல் மற்றும் உபகரணங்கள், மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் உதவிப் பணம், ஓய்வூதியச் செலவினம் என்ற செலவின விடயங்களில் 07 சதவீதம் முதல் 1,412 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும் மற்றும் பிரயாணச் செலவினம் மற்றும் போக்குவரத்து தொடர்பாடல் போன்ற செலவின விடயங்களில் 01 சதவீதம் முதல் 26 சதவீதம் வரையிலான வீச்சில் வீழ்ச்சியினையும் காண்பித்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் போன்றவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தன.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---:|---:|---:|
| ஆதன வரி | 420,000 | 420,906 | 1,147,989 |
| வாடகை வருமானம் | 2,586,626 | 2,794,140 | 537,331 |
| அனுமதிப்பத்திரக் | 1,570,400 | 1,557,540 | 83,750 |

| | | | |
|---|---|---|---|
| கட்டணம் தண்டப்பணமும் | 940,000 | 932,596 | 390,175 |
| பிடியாணைக் கட்டணமும் ஏனைய வருமானம் | 780,432 | 891,613 | 1,415 |

**2.3.2 வீதவரியும் வரியும்**

சபையினால் இறுதித் தடவையாக விலை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட 2007 ஆம் ஆண்டின் ஆதன வரி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நிலுவை ஆதன வரி பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத ஆதன வரி ரூபா 1,147,989 ஆக இருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்காக சபை செயல்நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

பேரேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத ஆதன வரிக் கட்டணம் ரூபா 83,750 ஆக இருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 ஏனைய வருமானம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் 12 தொலைபேசிக் கோபுரங்கள் காணப்பட்டதுடன் 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் தொலைபேசி கோபுரங்களுக்காக ஆகக் குறைந்தது ஒரு கோபுரத்திற்கு ரூபா 20,000 வீதம் ரூபா 240,000 ஆரம்பக் கட்டணமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 முத்திரைக் கட்டணம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 203,650 தொகை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டியிருந்தது.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 390,175 தொகை மாகாண பிரதம செயலாளரிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கிழக்கு மாகாண சபை, உள்ளராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் மீள் நிர்மாண புனரமைப்பு மற்றும் சமூக நலன் அமைச்சின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட 13 வாகனங்களை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 06 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், இதுவரை பழுதுபார்க்காமல் பழைய சபைக் கட்டிடம் அமைந்துள்ள வளவில் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான 08 வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரங்கள் உரிய ஆண்டின் போது பெறப்படாமையினால் தண்டப் பணமாக ரூபா 6,845 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) தற்போது சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற 08 காணிகளின் உரித்தை சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபைக்குச் சொந்தமான 02 படகுகள் 2009 நவம்பர் 12 ஆந் திகதி முதல் வெளித்தரப்பினருக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதும், வழங்கப்பட்ட திகதி முதல் எந்தவித வருமானமும் சபைக்குக் கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கிடைக்க வேண்டிய வாடகை வருமானமான ரூபா 293,500 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபையினால் அந்தப் படகை மீளக் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சபைக்குச் சொந்தமான கெப் வண்டி விபத்துக்குள்ளாகியதன் பின்னர் 2009 நவம்பர் 17 ஆந் திகதி அம்பாறையில் அமைந்துள்ள தனியார் கராஜில் கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 செப்தெம்பர் 28 ஆந் திகதிய கடிதத்தின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் விபத்து தொடர்பாக முறையான பரிசோதனையும் மேற்கொள்ளப்படவில்லை.

## 3.4 செயற்திட்டத்தை தாமதப்படுத்துதல்

தெயட்ட கிருள தேசியக் கண்காட்சி (தேசத்திற்கு மகுடம்) 2013 இன் கீழ் ரூபா 08 மில்லியன் நிதிஏற்பாட்டின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஹிங்குரான சுற்றுலா விடுதியின் வேலைச் செயற்பாடுகள் 2013 பெப்ரவரி 27 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கட்டமான கட்டிடத்தின் அத்திவாரப் பகுதியை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 1,444,162 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த கட்டிடம் நிர்மாணிக்கப்படுகின்ற இடம் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையான நிலையினால் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தது

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 13 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடல் |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டை சரியானதாகத் தயாரித்தல் |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | உடனடியாக சரி பிழைகளை பார்க்கக்கூடிய வகையில் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தைக் கையேற்றல் |
| (உ) கணக்கீடு | சொத்துக்களை கணக்குகளுக்கு கொண்டு வருதல் |